## தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

## மாவட்ட இயக்க மேலாண்மை அலகு- கரூர்.

## சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர் தேர்வு செய்தல்

## வேலைவாய்ப்பு செய்தி

கரூர் மாவட்டம் 2026-2027-ஆம் ஆண்டு, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் உள்ள 8 வட்டாரங்களில் காலியாகவுள்ள 28 சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் (Community Bank Coordinator) பணியிடங்களுக்கு பணியாளராக பணி அமர்வு செய்திட தகுதியான சுய உதவிக்குழு பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களுக்கான தகுதி விவரங்களை https://karur.nic.in என்ற வலைதள முகவரியிலும் பதிவிறக்கம் செய் து தெரிந்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட சுய விவரத்தினை (Bio-Data) சம்பந்தப்பட்ட வட்டார அளவிலான கூட்டமைப்பில் 23.05.2026 முதல் 02-.06.2026 வரை மாலை 5.00 மணிக்குள் வந்து சேரும்படி அனுப்பி வைக்க வேண்டும்.

**சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர் பணியிடத்திற்கான தகுதிகள்:**

1. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பைச் சார்ந்த பெண் சுய உதவிக்குழு உறுப்பினராக இருத்தல் வேண்டும்.
2. சுய உதவிக்குழு ஊக்குநராக குறைந்த பட்சம் 2 ஆண்டுகள் பணியாற்றி இருக்க வேண்டும்.
3. சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர் பணிக்கு தேர்வு செய்யப்படும் நபர் சமுதாயம் சார்ந்த அமைப்பு பணியாளராகவோ அல்லது தனியார் நிறுவனங்களில் முழுநேரப் பணியாளராக பணி இருத்தல் கூடாது.
4. தேர்வு செய்யப்பட வேண்டிய உறுப்பினர் பணிபுரியும் ஊராட்சியை (அல்லது ஊராட்சிகளை) சார்ந்தவராக இருத்தல் வேண்டும்
5. மக்கள் நிலை ஆய்வால் கண்டறியப்பட்ட இலக்கு மக்களாக இருத்தல் வேண்டும். (உரிய தகுதிகளுடன் இலக்கு மக்கள் விண்ணப்பிக்காத பட்சத்தில், பிற விண்ணப்பதாரர்களை கருத்தில் கொள்ளலாம்)
6. மலைப் பகுதியிலுள்ள ஆதி வாசிகள் குடியிருப்புகளில் மேற்கூறிய உறுப்பினர் இல்லாத நிலையில் ஆண் உறுப்பினரை மாவட்ட ஆட்சித்தலைவரின் சிறப்பு ஒப்புதலுடன் தேர்வு செய்யலாம்.
7. விண்ணப்பிக்கும் நாளில் 35 வயதுக்கு கீழ் இருத்தல் வேண்டும்.

8. 12- வது வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தமிழ் மற்றும் ஆங்கிலம் நன்றாக எழுதப் படிக்கவும் மற்றும் கணக்கிடும் திறன் உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
9. வாராக் கடன் உள்ள குழுவின் உறுப்பினராக இருக்க கூடாது.
10. மலைப்பகுதிகளில் 12-வது வகுப்பு தேர்ச்சி பெற்ற நபர்கள் இல்லாத நிலையில் 10-வது வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் இதர தகுதிகளுடன் இருப்பின் மாவட்ட ஆட்சியரின் சிறப்பு அனுமதியுடன் தகுதியுடைவர்களாக கருதப்படலாம்.
11. தகவல் தொடர்பு திறன் உடையவர்களாக இருத்தல் வேண்டும்.
12. வங்கிகளுக்குச் சென்று பரிவர்த்தனைகள் செய்தும் கடன் விண்ணப்பங்கள் பூர்த்தி செய்தும் அனுபவம் உள்ளவர்களாக இருத்தல் அவசியம்.
13. கணினி திறன் மற்றும் இரு சக்கர வாகனம் ஓட்டுநர் உரிமம் உள்ள இருசக்கர வாகனம் ஓட்ட தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.
14. ஆண்ட்ராய்டு கைபேசி வைத்திருப்பவர்களாகவும் அதை இயக்கி குறுந்தகவல் (SMS) மற்றும் வாட்ஸ்-அப் செய்தி அனுப்பவும் மற்றும் செயலி இயக்கும் திறன் பெற்றவர்களாகவும் இருத்தல் அவசியம்.

<u>**தேர்வு முறை**</u>:

75 மதிப்பெண் எழுத்து தேர்வு மற்றும் மாவட்ட அளவிலான தேர்வுக்குழுவால் 25 மதிப்பெண் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு, எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் கீழ்க்கண்ட தேர்வுக் குழுவால் சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும். இத்தேர்வுக் குழுவில் உள்ள உறுப்பினர்கள் விபரம்.

1. திட்ட இயக்குநர்,தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
2. மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர்
3. உதவி திட்ட அலுவலர் (நிதி உள்ளாக்கம்)
4. தேசியமயமாக்கப்பட்ட வங்கியின் பிரதிநிதி ஒருவர்
5. ஓர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயலர் (பெருங்கடன் பெற்ற கூட்டமைப்பு)

தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கு எழுத்துத் தேர்வு மற்றும் நேர்காணல் நடைபெறும் . நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏற்கப்பட மாட்டாது . முற்றிலும் தற்காலிக அடிப்படையில் வட்டார அளவிலான கூட்டமைப்பால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பி ன் மூலம் ஒப்பந்த பணியாளராக பணியமர்வு செய்வதால் பணி நிரந்தரம் குறித்து எவ்விதஉரிமையும் கோர முடியாது.

**<u>கரூர் மாவட்ட மகளிர் திட்ட பிரிவில் கீழ்காணும் வட்டாரங்களில் காலியாக உள்ள சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர் பணியிட விவரங்கள்</u>**

| வ. எண் | வட்டாரத்தின் பெயர் | மொத்த பணியிடங்கள் | Mathikalam பதிவுதளத்தில் உள்ள விவரப்படி | காலிப் பணியிடங்கள் |
|---|---|---|---|---|
| 1 | கரூர் | 14 | 8 | 6 |
| 2 | தாந்தோனி | 8 | 8 | 0 |
| 3 | அரவக்குறிச்சி | 8 | 5 | 3 |
| 4 | க.பரமத்தி | 11 | 6 | 5 |
| 5 | கிருஷ்ணராயபுரம் | 14 | 6 | 8 |
| 6 | குளித்தலை | 10 | 10 | 0 |
| 7 | கடவூர் | 12 | 7 | 5 |
| 8 | தோகைமலை | 12 | 11 | 1 |
| **மொத்தம்** | | **89** | **61** | **28** |

**<u>தொடர்புக்கு:</u>**

1. கரூர் மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, அலுவலக தொலைபேசி எண்:04324257377

2. உதவி திட்ட அலுவலர் (நி/க), அலைபேசி எண்:9444094298.

**<u>குறிப்பு</u>**

**விண்ணப்பிக்க கடைசி நாள் : 02.06.2026 (மாலை 5.00 மணி)**

மாவட்ட ஆட்சித்தலைவர்.
கரூர் மாவட்டம்.